# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை** : முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 187/பேரூ/2023**
**நாள் : 19. 11. 2024**

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி, மதுரை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
சோழவந்தான் பேரூராட்சி, மதுரை மாவட்டம். – எதிர் மனுதாரர்

மதுரை – 18, புது விளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் 5 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி, என்பவரின் 15.06.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.06.2023 அன்று பெறப்பட்டு, 187/பேரூ/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் 5 என்ற முகவரியில் வசிக்கும் மனுதாரர் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

“மதுரை மாவட்டம், வாடிபட்டி வட்டம், சோழவந்தான் பேரூராட்சியில், வேப்பமரம் (Bus stop) பேருந்து நிறுத்தத்தில் இருந்து பெரியகடை வீதி, மார்க்கெட் ரோடு பேருந்து நிலையம் (Bus stand) வரையிலும் மற்றும் மாரியம்மன் கோவில் முதல் முள்ளிபள்ளம் ரோடு வட்ட பிள்ளையார் கோவில் பஸ் ஸ்டாப் ரோடு (Bus stop) வரையிலும் சாலையின் இருபுறங்களிலும் கடைகள், ஜவுளிகடை, பூக்கடை பேன்சி ஸ்டோர், பழக்கடை மற்றும் வீடுகள் ஆகியவற்றில் ரேம்ப், தாழ்வாரம் போன்றவைகள் அமைத்து சாலையை ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. சோழவந்தான் சுற்றிலும் பல கிராமங்கள் உள்ளது. அக்கிராமத்தில் இருக்கும் மக்கள் சோழவந்தான் வந்துதான் எந்தவொரு தேவையான பொருட்கள் வாங்க வரவேண்டும். மேலும், சோழவந்தான் வழியாகத்தான், நிலக்கோட்டை திண்டுக்கல், வத்தலக்குண்டு செல்லும் பேருந்துகள் பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டும் மற்றும் ஆம்புலன்ஸ், பள்ளி மற்றும் கல்லூரி வாகனங்கள் இவ்வழியாக சென்று வருவதால், போக்குவரத்து நெரிசல் மிகவும் ஏற்படுவதால், நோயாளிகள் அவசர சிகிச்சைக்கு செல்ல முடியாமல் அவதிக்கு உள்ளாகி வருகிறார்கள். இந்த சாலை ஆக்கிரமிப்புகள் மற்றும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவது பேரூராட்சி செயல் அலுவலருக்கு நன்றாக தெரிந்து இருந்தும் இன்றுவரை சாலையோர ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வில்லை. இது குறித்த புகாரினை 10.06.2023 தேதியில் பதிவு தபாலில் அனுப்பியுள்ளேன். எனவே, இதுநாள் வரையிலும் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க

தவறிய முன்னாள், இந்நாள் சோழவந்தான் பேரூராட்சி செயல் அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும், மேற்படி ஆக்கிரமிப்புகளை, தயவு தாட்சியனம் இன்றி முழுமையாக அளந்து அத்துமால் காண்பித்து, ஆக்கிரமிப்புகளை அகற்றியும் (Remove) பின்வரும் காலங்களில் மீண்டும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாதவாறு பாதுகாத்திட சோழவந்தான் பேரூராட்சி செயல் அலுவலருக்கு உத்தரவிடுமாறு வேண்டிக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 03.07.2023 நாளிட்ட கடிதத்தின் மூலம் சோழவந்தான் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) சோழவந்தான் பேரூராட்சி செயல் அலுவலர். தனது 05.11.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"சோழவந்தான் பேரூராட்சி மூலம் மனுதாரரின் புகாரில் ஆக்கிரமிப்பு தொடர்பாக தெரிவித்துள்ள பகுதிகள் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலைகளாகும். இருப்பினும் போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகளை தவிர்ப்பதற்கு இச்சாலைகளில் அமைந்துள்ள சர்வே எண்களுக்கு பேரூராட்சி மூலம் ஆக்கிரமிப்பு அளவீடு செய்வதற்கு தொகை செலுத்தப்பட்டு வாடிப்பட்டி வருவாய் வட்டாட்சியர் மூலம் ஆக்கிரமிப்பு அளவீடு செய்துதர கோரப்பட்டுள்ளது. உதவி கோட்டப் பொறியாளர் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு நெடுஞ்சாலை துறை, வாடிப்பட்டி அவர்களின் கடிதத்தின்படி கூட்டு கள ஆய்வு செய்வது தொடர்பாக 23.08.2024 அன்று நெடுஞ்சாலை அலுவலகத்தில் கூட்டம் நடத்தப்பட்டது. அதன் பின்னர் உதவி இயக்குநர், நெடுஞ்சாலை துறை அவர்களால் 16.09.2024 அன்று ஆக்கிரமிப்புகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து நெடுஞ்சாலைத்துறையின் மூலம் வருவாய்த்துறை, காவல் துறை மற்றும் பேரூராட்சி துறை ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து 26.09.2024 அன்று ஆக்கிரமிப்புகள் எடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி, 26.09.2024ஆம் தேதியன்று நெடுஞ்சாலைத்துறை மூலம் வருவாய்த்துறை, பேரூராட்சித் துறையினரை ஒருங்கிணைத்து சோழவந்தான் பேரூராட்சி பகுதியில் அமைந்துள்ள 46 எண் ரோட்டில் அமைந்துள்ள கருப்பட்டி மெயின் ரோடு, முள்ளிப்பள்ளம் ரோடு, மற்றும் மாரியம்மன் கோவில் ரோடு மற்றும் மார்க்கெட் ரோடு ஆகிய பகுதிகளில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது. மேலும் 27.09.2024ஆம் தேதியன்று 46 எண் ரோடு மதுரை மெயின் ரோடு, பெரியகடை வீதி, இரயில்வே பீடர் ரோடு மற்றும் வாடிப்பட்டி ரோடு வரை ஆக்கிரமிப்புகள் முழுமையாக அகற்றப்பட்டது.

4) மனுதாரரும் மற்றும் சோழவந்தான் பேரூராட்சி செயல் அலுவலரும் 12.11.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 21.10.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு R. மயில்சாமி 12.11.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :-

"மதுரை மாவட்டம், சோழவந்தான் பேரூராட்சிக்குட்பட்ட

(i) வேப்பமரம் பேருந்து நிறுத்தத்திலிருந்து பெரிய கடைவீதி மார்க்கெட் பேருந்து நிலையம் வரையிலும்,

(ii) மாரியம்மன் கோவில் முதல் முள்ளிப்பள்ளம் ரோடு வட்டப்பிள்ளையார் கோவில் பேருந்து நிறுத்தம் வரையிலும் உள்ள சாலைகளில் ஆக்கிரமிப்பு செய்து கடைகள், வீடுகள், படிக்கட்டுகள் அமைத்துள்ளனர்.

மேற்படி, ஆக்கிரமிப்புகள் காரணமாக பள்ளி, கல்லூரி மற்றும் மருத்துவமனை வாகனங்களுக்கு போக்குவரத்து இடையூறுகள் ஏற்படுகின்றன என புகாரில் தெரிவித்திருந்தேன். தற்போது, ஆக்கிரமிப்புகள் 75 சதவீதம் நீக்கப்பட்டுள்ளன. இருப்பினும், வட்டப் பிள்ளையார் கோவில் மற்றும் மருது மஹால் பகுதிகளில் ஆக்கிரமிப்புகள் இன்னும் அகற்றப்படவில்லை. எனவே அவற்றை அகற்ற ஆவன செய்யுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரரான சோழவந்தான் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ச. செல்வக்குமார் என்பவர் 12.11.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :-

''மனுதாரர் புகாராக தெரிவித்துள்ள ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பகுதிகள் நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான சாலைகளாகும். இருப்பினும் போக்குவரத்து இடையூறு மற்றும் விபத்துக்கள் ஏற்படுவதை தவிர்க்கும் வண்ணம், நில அளவையர் மூலம் ஆக்கிரமிப்பு அளவீடு செய்ய வட்டாட்சியரிடம் பேரூராட்சியால் கோரப்பட்டு உரிய கட்டணம் செலுத்தப்பட்டது. ஆக்கிரமிப்புகள் அகற்றுவது குறித்து ஆய்வு செய்ய நெடுஞ்சாலைத் துறை உதவி இயக்குநர் தலைமையில் 16.09.2024 அன்று ஆக்கிரமிப்பு குறித்து ஆய்வு செய்யப்பட்டதை தொடர்ந்து, 26.09.2024 மற்றும் 27.09.2024 ஆகிய தினங்களில் நெடுஞ்சாலைத் துறை, வருவாய்த் துறை மற்றும் பேரூராட்சி துறை ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து பேரூராட்சிக்குட்பட்ட கருப்பட்டி மெயின் ரோடு, முள்ளிப்பள்ளம் ரோடு மாரியம்மன் கோவில் ரோடு, மார்க்கெட் ரோடு, 46ஆம் எண் ரோடு, மதுரை மெயின் ரோடு, பெரிய கடை வீதி, இரயில்வே பீடர் ரோடு மற்றும் வாடிப்பட்டி மெயின்ரோடு ஆகியவற்றிலுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன. மேலும், மனுதாரர் தெரிவித்துள்ள வட்டப் பிள்ளையார் கோவில், மற்றும் மருது மஹால் பகுதிகளிலும் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன. அதற்கான புகைப்பட ஆதாரங்களை இணைத்துள்ளேன். மனுதாரர் அவ்விடங்களை நேரில் பார்வையிட்டு உறுதி செய்து கொள்ளலாம் என்பதை முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்''–என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் சோழவந்தான் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு R. மயில்சாமி, என்பவர் தனது 15.06.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் மதுரை மாவட்டம் சோழவந்தான் பேரூராட்சிக்குட்பட்ட வேப்பமரம் பேருந்து நிறுத்தத்திலிருந்து பெரியகடைவீதி, மார்க்கெட் பேருந்து நிலையம் வரையிலும் மற்றும் மாரியம்மன் கோவில் முதல் முள்ளிப்பள்ளம் ரோடு வட்டபிள்ளையார் கோவில் பேருந்து நிறுத்தம் வரையிலுள்ள சாலையின் இருபுறங்களிலும் உள்ள கடைகள், வீடுகளில் படிக்கட்டுகள், தாழ்வாரம் மற்றும் சரிவுப்பாதைகள் அமைத்து சாலைகளை ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் பொது மக்களுக்கு போக்குவரத்து இடையூறு ஏற்படுவதாக தெரிவிக்கும் புகாரினை குறித்து, சோழவந்தான் பேரூராட்சி செயல் அலுவலர் மேற்காணும் ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்பட்டு விட்டன என தனது அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்து அதற்கு ஆதாரமாக புகைப்படங்களை சமர்ப்பித்துள்ளார்.

ஆனால் முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில் தற்போது 75 சதவீத ஆக்கிரமிப்புகள் மட்டுமே அகற்றப்பட்டும் மற்றும் வட்டப்பிள்ளையார் கோவில் மற்றும் மருது மஹால் பகுதிகளில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை எனவும் தெரிவித்துள்ள நிலையில், புகாராக தெரிவிக்கும் மேற்காணும் இடங்களை சோழவந்தான் பேரூராட்சி செயல் அலுவலர்

மற்றும் சம்பந்தப்பட்ட பேரூராட்சி பணியாளர்களுடன் கள ஆய்வு செய்து, ஆக்கிரமிப்புகள் முழுவதும் அகற்றப்பட்டதை உறுதி செய்து அதன் அறிக்கையை 30 நாட்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறு சோழவந்தான் பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு, நவம்பர் 19ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி,
   பிளாட் 5, அய்யப்பன் தெரு,
   செம்பருத்தி நகர்,
   புது விளாங்குடி,
   மதுரை – 18
2. செயல் அலுவலர்,
   சோழவந்தான் பேரூராட்சி,
   மதுரை மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை – 28
4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
   (பெயரிடப்பட்ட உரையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 28

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

21/11/24

சட்ட ஆலோசகர்/செயலாளர் (முகூபொ)

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032